விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 04 சனிக்கிழமை (20.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

### யாழ்., கோப்பாய், கிளிநொச்சி பொலிஸ் பிரிவுகளில்

## மாவீரர் நினைவேந்தலுக்கு நீதிமன்றங்கள் தடை

### கிளிநொச்சியில் 51 பேருக்கு தடையுத்தரவு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கக் கோரி பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு நீதிமன்றங்கள் அனுமதியளித்துள்ளன.**

அந்தவகையில் கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சார்பில் தடைகோரிய மனுக்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னர் கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 512 பிரிகேட் தலைமையகத்துக்கு முன்பாகவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சூழலிலும் யாழ்ப்பாணம்பொலிஸ்நிலைய 15

### கொரோனாத் தொற்றால் யாழில் மூவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றி னால்யாழ்ப்பாணத்தில்மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசா 15

### இருபாலையில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இருபாலைப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த 15

### கிணற்றிலிருந்து முதியவர் சடலமாக மீட்பு

#### ஆனைக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சில தினங்களுக்கு முன் னர் காணாமல் போன முதியவர் கிணற்றில் 15

### ஜனாதிபதி செயலணி வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

கலகொட அத்தே ஞானசார தேரரின் தலைமையிலான ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியினர் வடக்கிற்கான பயணம் 15

# மாவீரர் வாரம் நாளை ஆரம்பம்!

**(யாழ்ப்பாணம்)**

**தமிழ் மக்களின் விடிவுக்காக தமது இறுதி மூச்சுவரை போராடி களமாடி வீரச்சாவடைந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் வாரமாக நவம்பர் 21 தொடக்கம் 27 வரையான ஒருவாரகாலம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.**

கடந்த 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு தாயக தேசத்தில் பெரும்பாலான மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் கடைப்பிடிக்கப்பட்டன. தற்போது நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி - குழப்பங்கள் காரணமாக மாவீரர் நாள் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்கு வடக்கு - 15




### வவுனியாவில் வாள்களுடன் 4 பேர் கைது

(வவுனியா)

வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் வாள்களுடன் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். 02

### மாகாண சபைத் தேர்தலுக்காக புதிய சட்டம் தயாராகிறது

#### அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் வேண்டுமென்றே மற்றும் தந்திரோபாயமாக மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்ததாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று குற்றம் சுமத்தினார். 15

### பாடசாலைகளை நடத்துவதில் மாற்றம் குறித்து ஆராய்வு

#### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பாடசாலைகளை நடத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக சுகா 15

### கொரோனா மரணம் 14 தொற்று 745

(கொழும்பு)

ஆண்கள் 11 பேர் உட்பட மேலும் 14 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள் 15

### கிளிநொச்சியில் துப்பாக்கி மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் உள்ளூர் துப்பாக்கி ஒன்று மீக்கப்பட்டுள்ளது.

நேற்று பகல் இரா 15



#### மற்றுமொரு ஆபத்தான


### டெல்டா வைரஸ் திரிபு இலங்கையில் கண்டறிவு

(கொழும்பு)

இலங்கையில் மற்றுமொரு டெல்டா உப வைரஸ் திரிபான டெல்டா உப பரம்பரை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக 15

#### மன். ஆட்காட்டிவெளியிலுள்ள

### துயிலுமில்லத்தின் சுடரேற்றும் பீடம் இடித்தழிப்பு



(மன்னார்)

மன்னார்- ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான 15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்கள் கமலா ஹரிஸின் வசமாகின

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தனது அதிகாரங்களை தற்காலிகமாக உப ஜனாதிபதி கமலா ஹரிஸிடம் கையளித்துள்ளதாக வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகயீனம் காரணமாக ஜோ பைடன், சிகிச்சை பெற்றுவரும் நிலையிலேயே, ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் உப ஜனாதிபதியிடம் நேற்று முதல் கையளிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ் பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக கடமையாற்றும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.(ஞா)

## வாள்களு...

வவுனியாவில் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலும் இம்மாதமும் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைவாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த சம்பவங்கள் தொடர்பில் வாள்களுடன் நான்கு இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

மேலும், அவர்களிடம் இருந்து 2 மோட்டார் சைக்கிள்கள், 4 வாள்கள், தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் பொல்லுகள், 15 பவுண் நகை முகத்தை மறைக்கும் கறுப்பு துணி என்பன மீட்கப்பட்டுள்ளன.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(ஞா-250)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க முன்னாள் உப தலைவர், பொருளாளர், தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்

**அமரர் சின்னையா அழகானந்தம்**



**தோற்றம் :- 20.06.1944 மறைவு :- 19.11.2021**

அவர்கள் நேற்று (19.11.2021) காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குறிப்பு:** அங்கத்தவர்கள் சுகாதார நடைமுறையினை கடைப்பிடித்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பணிப்பாளர் சபை, அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
யாழ்.மாவட்ட பாரவூர்தி
உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம்


(8690)

## மரண அறிவித்தல்

### முருகேசம்பிள்ளை விசுவநாதன்

(ஓய்வுபெற்ற கொள்வனவு உத்தியோகத்தர்-
ப.நோ.கூ.சங்கம், காரைநகர்)

**தோற்றம் 21.03.1938 மறைவு 19.11.2021**



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை விசுவநாதன் அவர்கள் நேற்று (19.11.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் மேனகையின் அன்புக் கணவரும் கிருஸ்ணவேணி (பிரதேச செயலகம், காரைநகர்), குகநேசன் (கோட்டக்கல்வி அலுவலகம் - காரைநகர்), பாலேந்திரன் (இலங்கை வங்கி, மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருலோகேஸ்வரனின் (பிரதேச செயலகம், காரைநகர்) மாமனாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் காந்திமதியின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கருங்காலி,
காரைநகர்.

(C-3062)

தகவல்: குடும்பத்தினர்
077 574 8617, 077 874 1813

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தால்

# யாழ்.மாநகர சபைக்கு செங்கோல் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிதேவஸ்தானத்தின் 10ஆவது எஜமான் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நினைவாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு செங்கோல் நேற்று கையளிக்கப்பட்டது.

அண்மையில் குகபதமடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது எஜமான் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நினைவாக நல்லூர் ஆலயம் மற்றும் யாழ்ப்பாண பண்பாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட செங்கோல் கையளிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமிகோவில் சிவாச்சாரியார்களால் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனிடம் நல்லூர் ஆலயத்தில் வைத்து பிற்பகல் 5.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.

(ஞா-18,33)

# நல்லூரில் இடம்பெற்ற சொக்கப்பனை உற்சவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை - சொக்கப்பனை உற்சவம் நேற்று 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன்கூடிய குமாராலய தீபத்திருநாளில்வள்ளி, தேவசேனா சமேதராக கைலாச வாகனத்தில் முத்துக்குமார சுவாமி எழுந்தருள கார்த்திகைத் தீப சொக்கப் பனை தீபமேற்றப்பட்டது. (ஞா-18,33)

## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2022

யாழ்.மாநகர சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 31.12.2021ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***குறிப்பு:*** மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

**முதல்வர்,**
**யாழ்.மாநகர சபை.**

(C-3059)

## மாநகர எல்லைக்குள் குழாய்க் கிணறு நிர்மாணித்தல் - 2022

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் குழாய்க் கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2021ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2022ஆம் ஆண்டுக்கான பதிவுகளை 31.12.2021ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், யாழ்.மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய்க் கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**முதல்வர்,**
**யாழ்.மாநகர சபை.**


(C-3060)

# அடக்குமுறையைத் தொடர்ந்து பிரயோகித்தால் அதை உடைத்து வீறுகொண்டெழுவர் தமிழர்

## பாராளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன் விளாசல்

(கொழும்பு)

**போரில் உயிர்நீத்த தமது உறவினர்களை நினைவுகூரும் நிகழ்வுகளை அரசாங்கம் தொடர்ந்தும் தடுத்து நிறுத்தினால் எமது மக்கள் மேலும் வீறு கொண்டு எழுவார்கள் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாதம் கார்த்திகை மாதம் என்பதனால் நீதிமன்ற தடை உத்தரவுகளை வீடு வீடாகச் சென்று ஒவ்வொருவருக்கும் பொலிஸார் கொடுத்து வருகின்றனர்.


எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. போர் மௌனித்துவிட்டது. மண்ணுக்காக மரணித்தவர்களை நினைவுகூருவதற்கான வாய்ப்புக்களை இன்றும் அரசாங்கம் தடுக்கின்றது.

அத்துடன் நாடு வறுமையில் சிக்கித் தவிக்கையில் இராணுவத்துக்கு எதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவா இந்த நகர்வு. விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டனர் என்றால் யாருடன் போரிடப் போகிறீர்கள். பாகிஸ்தானுடனா, இந்தியாவுடனா அல்லது தமிழர்களுடனா? என்ற கேள்வியும் எழுகின்றது. என அவர் தெரிவித்தார். (நி)

# போர் வெற்றிக்கான நினைவிடங்களை நிர்மாணிக்கக் கூடாது

## பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

போர் வெற்றிகளை நினைவுகூர நினைவிடங்களை நிர்மாணிக்கக் கூடாது என பேராசிரியர் அகலகட சிறி சுமண தேரர் தெரிவித்தார்.

சிங்கள இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சந்தஹிரு சேய தாது கோபுரம் போர் வெற்றியை நினைவுக்கூரும் நினைவுத் தூபியாகவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே நான் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன்.

இப்படியான நினைவிடங்களை நிர்மாணிப்பதன் மூலம் தோல்வியடைந்த தமிழ் தரப்பினர் மத்தியில் ஆத்திரத்தை உருவாக்கும். அப்படியான மனநிலை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.

போரில் வெற்றி பெற்றவர்கள் திருப்தியும் பெருமையும் அடைவார்கள். ஆனால் தோல்வியடைந்தவர்களுக்கு துன்பமும், துயரமும் அதிகம் என்பதுடன் தோல்வியடைந்தவர்கள் ஆத்திரமடைவார்கள். இதனை சாந்தப்படுத்த முடியாது. பௌத்த சமயம் யுத்தங்களை அங்கீகரிப்பதில்லை.

சந்தஹிரு சேய தாது கோபுரம் தோல்வியடைந்தவர்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தும் தீ.

இதனை நிர்மாணித்ததால், சிங்கள பௌத்தர்கள் சிலரும், சில இராணுவத்தினர் மாத்திரமே மகிழ்ச்சியடைவார்கள் எனவும் சிறி சுமண தேரர் சுட்டிக்காட்டினார்.

அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சந்தஹிரு சேய தாது கோபுரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பெருங்கதை விரத உற்சவம்

(குப்பிழான்)

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருங்கதை விரத உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம்-9 ஆம் திகதி வியாழக்கிழமை வரை தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும்-7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை-8 மணியளவில் 1008 சங்காபிஷேகமும், காலை-9 மணிக்குச் சதுர்த்தி உற்சவமும், அன்றையதினம் பிற்பகல்-3 மணியளவில் கஜமுகசங்கார உற்சவமும் நடைபெறும். 9 ஆம் திகதி காலை-8 மணியளவில் மஹாகணபதி ஹோமமும் தொடர்ந்து 108 கலச சங்காபிஷேகமும் நடைபெறும். (4-5-18)




யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்துக்கும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் படி, யாழ்.பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடத்திலுள்ள கணக்கியல், நிதி முகாமைத்துவம் மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்-சிவ்சாந்தன்)

# பல்கலை.மாணவர்களுக்கான பதிவு அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளிகளுக்கு அமைவாக பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்ற மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இதேவேளை, பல்வேறு பீடங்களையும் டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதத்தின் முதற்பகுதியில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை பல்கலைக்கழகத்திற்கு 41,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவது நிச்சயம்

## பந்துல சமன் குமார தெரிவிப்பு

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நீண்டகாலம் மூடி வைத்தால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவது நிச்சயம் என பெற்றோலியக் கிளையின் வணிகத் தொழில்கள் மற்றும் முற்போக்கு ஊழியர் சங்கத்தின் தலைவர் பந்துல சமன் குமார தெரிவித்தார்.

சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்வதன் மூலம் நீண்டகால எரிபொருள் பிரச்சினையை சமாளிக்க முடியாது.

தற்போதைக்கு எரிபொருள் தட்டுப்பாடு இல்லையென்றாலும், நீண்டகால பாதிப்புகளை தவிர்ப்பதற்காக நாட்டில் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# நியூஸிலாந்துக்கு எதிரான வெற்றி எளிதாக கிடைக்கவில்லை

## ரோகித்



நியூஸிலாந்துக்கு எதிரான 20 ஓவர் தொடரில் ரோகித் சர்மா- ராகுல் டிராவிட் கூட்டணி வெற்றியுடன் தொடங்கியது.

இந்த வெற்றி குறித்து கப்டன் ரோகித் சர்மா கூறியதாவது,

நிச்சயமாக இந்த வெற்றி நாங்கள் எதிர்பார்த்தது போல் எளிதாக அமையவில்லை. ஆனாலும் இந்த அனுபவத்தின் மூலம் வீரர்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

அதாவது எதை செய்வது அவசியம் என்பதை தெரிந்திருப்பார்கள்.

எல்லா நேரத்திலும் அதிரடியான ஷாட்களை ஆட முடியாது போன்றவற்றை புரிந்து கொள்ள இயலும்.

ஒரு கப்டனாக, அணியாக வீரர்கள் வெற்றி பெற்று தந்தது மகிழ்ச்சியை அளிக்கிறது.

எங்களுக்கு இது சிறந்த போட்டியாக இருந்தது. சில முக்கியமான வீரர்கள் இல்லை.

இதனால் மற்ற வீரர்களுக்கு தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைத்தது.

சூர்யகுமார் யாதவ் எங்களது மிடில் வரிசையில் மிகவும் முக்கியமான வீரர் ஆவார். சுழற்பந்தை அவர் எளிதாக கையாண்டார்.


எங்களது பந்து வீச்சாளர்கள் சிறப்பாக வீசி நியூஸிலாந்தை கட்டுப்படுத்தினார்கள்.

போல்ட் பந்தில் நான் ஆட்டம் இழந்தது என்பது என்னுடைய பலவீனத்தை அவர் நன்கு புரிந்து வைத்துள்ளார்.

அவருடைய பலம் எனக்கு தெரியும். மகிழ்ச்சியுடன் வெற்றி கிடைத்தது. முதல் வெற்றி எப்போதுமே சிறந்தது எனத் தெரிவித்தார்.

இந்த வெற்றி மூலம் 3 போட்டி கொண்ட தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (4-6)

# இரட்டையர் கரம் போட்டி யாழ். மாவட்ட அணி மூன்றாமிடம்



33 ஆவது தேசிய மட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான இரட்டையர் கரம் ஆட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணி 3 ஆம் இடத்தை பெற்றுள்ளது.

இலங்கையின் 33 தேசிய மட்ட கரம் போட்டிகளின் பெண்களுக்கான 3ஆம் இடத்திற்கான போட்டிகள் அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் 3ஆம் இடத்திற்கான இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட இளைஞர் அணி மோதியது.

இதில் யாழ். மாவட்ட அணியை பிரதிநிதித்துவம் செய்த எஸ். சதுர்சிகா, எல். துஷாயினி ஆகியோர் 25:0, 25:8 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றனர். (4-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2453

**மது**




**விஷ்ணு**




**கவி**




**சாலின்**




**குமார்**




**நந்தினி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

20.11.2021
கார்த்திகை 04, சனிக்கிழமை
பிரதமை பிற்பகல் 4.40 மணிவரை
ரோகினி முழுவதும்
சுபநேரம் -3.09-4.39 மணிவரை
இராகுகாலம் -9.09-10.39 மணிவரை
சந்திராஷ்டமம்: விசாகம்
விநாயக விரதாரம்பம்,விஷ்ணுவாலய தீபம்

வளவன்


மேஷம்

எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பணப்புழக்கம் கூடும் நாள்.


ரிஷபம்

எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


மிதுனம்

வெளியில் புறப்படும் போது யாராவது உதவி கேட்டு வரலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.


கடகம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.


சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.


கன்னி

எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தொழில் போட்டிகள் மாறும், காரிய அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும்.


துலாம்

வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


தனுசு

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மகரம்

செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


கும்பம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.


மீனம்

குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

ஆராய்ந்து நட்புக்கொள் நட்பு கொண்ட பிறகு ஆராயாதே.

# 100 பில்லியன் ரூபாய் வருமான இழப்பு

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

**கொவிட் பெருந்தொற்று நிலைமைகளினால் அரசாங்கம் பாரியளவு தொகை வரி வருமானத்தை இழந்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எச். எம்.டபிள்யூ.சீ.பண்டார தெரிவித்தார்.**

சிங்கள ஊடகம் ஒன்றிக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் பெருந்தொற்று நிலைமைகளினால் நாட்டுக்கு 100 பில்லியன் ரூபாய் வரையிலான வருமான வரி இழப்பு ஏற்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வரி திருத்தங்கள் அரச வருமான இழப்பில் தாக்கத்தை செலுத்தியது.

பெரு நிறுவனங்கள் மீது வரி அறவீடு செய்யும் அரசாங்கத்தின் யோசனைத் திட்டங்களினால் நுகர்வோர் பாதிக்கப் படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் வரிச் சலுகைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என குறிப்பிட்டார். (நி-5)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணி (Bachelor of Natural Sciences) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் கணிதம், அல்லது உயிரியலில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை WWW.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 14.11. 2022 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளதர் கே. கந்தவேள் அறிவித்துள்ளார். (4-5)



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை காலை வரலாற்றுச் சிறப்புமிக்க ஜய ஸ்ரீ மஹா போதியில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.


# துயர் பகிர்கின்றோம்

மண்ணில்
23.11.1952

விண்ணில்
06.11.2021



பாலசிங்கம்
விஜயகுமார்

லண்டன்
(எமது பாடசாலை அதிபர்
திரு.த.தயானந்தன் அவர்களின்
துணைவியாரின் அன்புத் தந்தை)

06.11.2021 அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-3053)

ஆசிரிய நலன்புரிக்கழகம், யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி, காங்கேசன்துறை.

# கொரோனா பரவலை கட்டுப்படுத்த இலவச அன்டிஜன் பரிசோதனை

## சாவகச்சேரி சுகாதார பிரிவு அறிவிப்பு

(சாவகச்சேரி)

**கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலவச துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.**

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, "சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட இடங்களில் வசிப்பவர்கள் கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின், உடனடியாக தங்களை சுய தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள்.

"அத்தோடு, கால தாமதமின்றி கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை, வரணி பிரதேச வைத்தியசாலை அல்லது சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் துரித அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுங்கள்.

"இவற்றுக்கு மேலதிகமாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று தினங்களும் காலை 8.30 மணிக்கு குறித்த பரிசோதனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது" எனவும் தெரிவித்தனர். (4-5-18-33)

# பாடநெறிகளை முழுமைப்படுத்த அதிபர், ஆசிரியர்கள் தயார்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

கொவிட் பரவல் காரணமாக நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள், இடைநிறுத்தப்பட்டு மீண்டும் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாடசாலை மாணவர்களுக்கு தவறவிடப்பட்ட பாடநெறிகளை முழுமைப்படுத்துவதற்கு, தெரிவுசெய்யப்பட்ட புதிய பாடத் திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு தயாரிக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

மேலும் தவறவிடப்பட்ட பாடநெறிகளை முழுமைப் படுத்த அதிபர்களும் ஆசிரியர்களும் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-5)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி அம்மன் தேவஸ்தானத்தின் பிரதம குருக்கள் கிரியாஜோதி சிவஸ்ரீ ந.மகேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)




யாழ்.இந்திய துணைத்தூதரகமும் யாழ்.வாலிப கிறிஸ்தவ சங்கத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ymca மண்டபத்தில் நடைபெற்றது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 320 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 140 | 160 |
| தக்காளி | 350 | 400 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 200 | 260 | 240 | 250 |
| கரட் | 180 | 340 | 320 | 400 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 240 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 160 | 160 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 160 |
| பயற்றங்காய் | 500 | 400 | 240 | 320 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 120 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 | 480 |
| போஞ்சி | 380 | 400 | 400 | 480 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | - | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | - | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | -- | 500 | - | 300 |
| முள்ளங்கி | 140 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 180 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 150 | 70 | 100 |

# தாதியர்களின் பதவி உயர்வுக்கு உரிய நடவடிக்கை எடுங்கள்

## வடக்கு ஆளுநர் பணிப்பு

(அராலி)

வடமாகாணத்தில் சிரேஷ்ட தர தாதியர்களின் முறையான பதவி உயர்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணசபையினால் உரிய காலப்பகுதியில் தாதியர்களை அவர்களின் தர அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படவேண்டும்.

அவ்வாறு அவர்களின் பதவி உயர்வு வழங்காத சந்தர்ப்பங்களில் திறமையற்ற நிர்வாகம் வடக்கில் இடம் பெறுகின்ற மாதிரியை ஏற்படுத்திவிடும்.

பொதுச்சேவை ஆணைக் குழு வாரத்தில் ஒருமுறை கூடி தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை சரிவர நிறைவேற்ற வேண்டும்.

பொதுச்சேவை ஆணைக் குழு வழங்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் நான்கு வாரங்களுக்குள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது மாதத்தில் ஒரு முறை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சென்று மதிப்பீடுகளையும் பிரச்சினைக்கான தீர்வுகளையும் முன்வைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-5-104)



# சுற்றுலாத்துறையை மேம்படுத்த யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு கடல்வழிப் பயண சேவை

(யாழ்ப்பாணம்)

சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் நோக்கில் இது வரை காலமும் இல்லாத கடல் வழி பயண சேவையொன்று யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

எட்டுப் பேர் தங்கக்கூடிய நான்கு அறைகளைக் கொண்ட பாய்க்கப்பல் வடிவிலான இயந்திர கப்பலில் ஒரு சிலநாட்கள் கடலில் பயணிக்கக்கூடிய வகையில் இந்த சேவை பரீட்சார்த்தமாக டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பு யாழ் ஊடக அமையத்தில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த தொழிலதிபர் சு.மனோகரன் காரைநகரில் இருந்து இதனை இந்த மாதத்தில் ஆரம்பிக்க இருந்தோம்.

காலநிலை மாற்றம் காரணமாக டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கவுள்ளோம்.

இதன் மூலம் அந்நியச் செலாவணி அதிகரித்து நாட்டிற்கு வருமானம் ஈட்டப்படுவதுடன் உள்ளூர்வாசிகளும் பயன்பெறுவர் என தெரிவித்தார். (4-5-33)

# நாட்டில் கொவிட் தொற்று 5 வீதத்தால் திடீர் அதிகரிப்பு

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் கொவிட் தொற்றுக்கள் 5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. இது கடந்த சில நாட்களில் ஏற்பட்டுள்ள திடீர் அதிகரிப்பாகும் என்று சுகாதார பரிசோதகர்கள் சம்மேளனத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.**



எனினும் மரண விகிதத்தில் மாற்றங்கள் இல்லையென்று கூறிய அவர், தடுப்பூசித் திட்டத்தில் குறைவு ஏற்படுமானால் மரண விகிதம் அதிகரிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் அதிகாரம் கொண்டவர்கள், நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்து பொது மக்களும் தமது இயல்பான வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர். இது கொழும்பில் மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாகவே உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பொது மக்கள் இந்த வாரத்தில் நீண்ட விடுமுறையில் செயற்படுகின்றபோது உரிய சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்காது போனால், எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் நாட்டில் இன்னும் ஒரு முடக்கலை மேற்கொள்ள வேண்டியேற்படலாம் என்றும் உபுல் தெரிவித்தார். (நி)

# விரைவில் அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நிறைவடைந்ததும், அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், மேலும் சில அமைச்சுகளுடன் புதிய விடயதானங்கள் இணைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர்களான ரொஷான் ரணசிங்க, சனத் நிஷாந்த ஆகிய இருவரும் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படலாம் எனவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

# குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் 272 வெற்றிடங்கள்

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி வரை 272 வெற்றிடங்கள் நிலவுவதாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே (கோபா குழு) இவ்விடயம் தெரிய வந்தது.

இந்த வெற்றிடங்களினால் திணைங்களத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுப்பதில் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதாகவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கோபா குழு பரிந்துரைத்தது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் உயரம்: 164 cm<br>கி.பா: 28 செவ் 7 இல் சூரி 8 இல்<br>தகைமை/தொழில்: A/L T.O (அமெரிக்கா)<br>எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுடைய உள்நாட்டு பெண் தீவகம், காரைநகர் வேண்டாம்<br>தொ.இ: B/12128 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2 ஆம் பாதம்<br>கி.பா: 54 செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்: B.B.A பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12140 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1 ஆம் பாதம்<br>உயரம்: 5'5"<br>கி.பா: செவ் 2 இல் சூரி 3 இல்<br>தகைமை/தொழில்: O/L கமம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண பெண்<br>தொ.இ: B/12130 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 9 சூரி 6 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: B.A பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12143 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4 ஆம் பாதம்<br>கி.பா: 23 செவ் 6 இல் சூரி 6 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBA வங்கி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/12135 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1 ஆம் பாதம்<br>கி.பா: 11 செவ் 6 சூரி 9 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12145 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 8 செவ் 9 சூரி 11 இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BSc.Eng.(Hons) பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி (கொழும்பில் வசிப்பவர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12136 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 17 செவ் 9 சூரி 12 இல்<br>உயரம்:5'4'<br>தகைமை/தொழில்: Bsc (Hons)ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12148 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# டொலர்களை தாய்நாட்டிற்கு அனுப்புங்கள்

## புலம்பெயர்ந்தோரிடம் பந்துல கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

"கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தவறான அந்நிய செலாவணி முகாமைத்துவம் காரணமாகவே டொலர் கையிருப்பு குறைந்துள்ளது.

கொரோனா தொற்று நோய் காரணமாக வெளி நாட்டு நிதி மூலங்கள் குறைந்ததால், நிலைமை மேலும் பாரதூரமாக மாறியுள்ளது.

டொலர் தட்டுப்பாட்டை போக்குவதற்காக இலங்கை அரசாங்கத்தால் டொலர்களை அச்சிட முடியாது.

இந்த நெருக்கடியில் இருந்து தப்பிக்க வெளி நாடுகளில் உள்ள இலங்கையர்கள் கூடுமான அளவில் டொலர்களை தாய் நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும்" என அவர் கோரிக்கை விடுத்தார். (நி-5)

### வாகனங்களின் விலை இன்னும் அதிகரிக்கும்

(கொழும்பு)

மீள்சீரமைக்கப்பட்ட வாகனங்களின் விலைகள் எதிர்வரும் வாரங்களில் அதிகரிக்கும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்தார்.

2022ஆம்ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தமக்கு சாதகமாக எந்தவொரு பெறுமதியையும் சேர்க்கவில்லை. முன்னைய பிரச்சினைகளையே தாங்கள் தொடர்ந்து எதிர்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)


### முதியோர்களுக்கான இலவச தங்குமிட வெற்றிடங்கள்

**தகுதி**

1. எதுவித வாழ்வாதாரங்களும், வீடு வசதிகளும் பராமரிப்பும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.
2. 60 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
3. கடுமையான நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. உணவு, உடை, உறைவிடம் மற்றும் அடிப்படை மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
5. Covid-19 இரு தடுப்பூசிகளும் எடுத்தவர்களாக இருக்க வேண்டும்.
6. உங்கள் கிராம சேவையாளரின் கடிதமும் உங்கள் சகோதரர் அல்லது உறவினர்களின் தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட வேண்டும்.
7. நவீன வசதி கொண்ட பிரத்தியேகமான அறைகளும் வாடகைக்கு உண்டு. ஆனாலும் உணவு மற்றும் அடிப்படை வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

**தங்கம்மா முதியோர் இல்லம்,**
**புதுக்குளம்,**
**கனகராயன்குளம்.**

**தொடர்புகளுக்கு**
**முகாமையாளர்: 077 449 9619**
**அலுவலக உத்தியோகத்தர்: 077 217 5617** (இ)

# சுவர் இடிந்து விழுந்து குழந்தைகள் உட்பட ஒன்பது பேர் பலி

(சென்னை)

தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததன் காரணமாக 4 குழந்தைகள் உட்பட மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் உள்ள பேர்ணாம்பட்டு பகுதியில் இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இது குறித்து அப்பகுதி மக்கள் அளித்த முறைப்பாட்டின் பேரில் பேர்ணாம்பட்டு பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# வேளாண் சட்டங்களை திரும்பப் பெற தீர்மானம்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி குருநானக் ஜெயந்தியை ஒட்டி பல்வேறு விவகாரங்கள் குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மத்திய அரசு கொண்டு வந்த சர்ச்சைக்குரிய 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற முடிவு செய்துள்ளதாகவும் விவசாயிகளிடம் மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்தார்.

அதேநேரம் தொடர்ந்து டில்லியில் போராடி வரும் விவசாயிகள் வீடுகளுக்கு செல்ல வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த அவர், 2014 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு சேவை செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வேளாண் சட்டங்கள் தொடர்பில் விவசாயிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தமையை சுட்டிக் காட்டிய அவர், அந்த பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்ததாகவும் தெரிவித்தார்.

ஆகவே மூன்று வேளாண் சட்டங்களையும் முறைப்படி திரும்பப் பெறுவதாகவும் பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

# சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 06.12.2021 ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 07.12.2021 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 07.12.2021 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம்,

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் சந்தி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள மேல்மாடி கடை இல.02 | 2,400,000.00 | 30,000.00 | 1,000.00 |
| 02 | கோண்டாவில் வீதியில் ஐயப்பன் கோவிலடிக்கு அருகில் உள்ள கடை இல.01 | 420,000.00 | 5,250.00 | 1,000.00 |
| 03 | கோண்டாவில் வீதியில் ஐயப்பன் கோவிலடிக்கு அருகில் உள்ள கடை இல.02 | 420,000.00 | 5,250.00 | 1,000.00 |

நல்லூர் பிரதேச சபை

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விதாரர் தமது கேள்வித் தொகையினை ஒரே தடவையில் 15.12.2021 ஆம் திகதி செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
7. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரியும் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
8. மாதாந்த வாடகைப்பணத்தினை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும். தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
9. மேற்குறிப்பிட்ட 7, 8 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
10. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. சித்திகரக் குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
13. சித்திகரக் குத்தகைதாரர் நல்லூர் பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
14. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு ப.மயூரன்**
**தவிசாளர், நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
**2021.11.20**

C-3055

# இடம்பெயரும் செந்நண்டுகள்



(கன்பரா)

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான கிறிஸ்மஸ் தீவின் காடுகளில் இருந்து மில்லியன் கணக்கான செந்நண்டுகள் பெருங்கடலை நோக்கிய தங்களது வருடாந்த இடப்பெயர்வைத் தொடங்கியுள்ளன.

வழக்கமாக ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் பெய்யும் முதல் மழையின் போது மில்லியன் கணக்கில் செந்நண்டுகள் இவ்வாறு இடம்பெயர்வது வழமையாகும்.

கிட்டத்தட்ட 50 மில்லியன் செந்நண்டுகள் இவ்வாறு இடம் பெயரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு வீதிகள் மூடப்பட்டுள்ளன.


சில பகுதிகளில் நண்டு கள் இடையூறு இன்றி கடலை நோக்கி நகர்வதற்காக விசேட மேம்பாலங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

நண்டுகளின் இடம் பெயர்வைக் காண கிறிஸ்மஸ் தீவில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கூடியுள்ளனர். (நி-5)

# பராமரிப்பின்றி காணப்படும் வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்

(முறிகண்டி)

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வன்னேரிக்குளம் பகுதியில் வடக்கு மாகாண சபையினால் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா மையம் இன்று பயன்பாடற்று பற்றைகளால் சூழ்ந்தும், பராமரிப்பின்றியும் காணப்படுகிறது.**



வடமாகாண சபையில் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் 6 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த சுற்றுலா அமையம் அமைக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட குறித்த சுற்றுலா மையம் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் படிப்படியாக சேதமடைய ஆரம்பித்து இன்று முற்றமுழுதாக செயலிழந்து காணப்படுகிறது.

அங்கு செல்வதற்காக அமைக்கப்பட்ட வீதியில் காணப்படும் பாலமும் சேதமடைந்து காணப்படுகிறது. அதனால் வாகனங்கள் செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. இது தொடர்பில் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சேதமடைந்துள்ள சுற்றுலா அமையத்தினை பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-100)

# பேருந்து சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும்

## மக்கள் கோரிக்கை


(அக்கராயன்)

மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் கூடுதலாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பத்தாண்டுகளாக நிறைவேறாமல் உள்ளது.

மேற்படி இரு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பல கிராமங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன.

இதன் காரணமாக மாங்குளத்தில் இலங்கை போக்குவரத்துச்சபைக்கான நிலையம் ஒன்றினை அமைத்து மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளுக்கான கூடுதலான பேருந்து சேவைகள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இதனால் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய ஆசிரியர்கள், மாணவர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இலங்கை போக்குவரத்து சபை மேற்படி பகுதிகளுக்கு கூடுதலான பேருந்து சேவைகள் நடத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)




யாழ்.மாவட்ட தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கத்தினால் 75 வயதினை பூர்தி செய்த ஓய்வு நிலை வங்கியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கி சுற்றுலா பங்களாவில் தலைவர் ராஜா மகேந்திரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# வவு. வடக்கு பிரதேச சபையின் 2022 பாதீடு தோல்வி

(குருமன்காடு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு தோல்வியடைந்துள்ளது.

வவுனியா வடக்கு பிர தேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை தவிசாளர் நேற்று சபையில் முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பாதீடு சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது 26 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்கள் மட்டும் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் பாதீடு தோல்வியடைந்தது. (4-5-250)

# பச்சிலைப்பள்ளிக்கு படையெடுக்கும் பெருமளவு கால்நடைகள்

## விவசாயச் செய்கைகள் பாதிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு பெருமளவு கால்நடைகள் மேய்ச்சலுக்காக கொண்டு வரப்படுவதன் காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது காலபோக நெற்செய்கை நடைபெற்று வருகின்றது. குறிப்பாக இரணைமடுக் குளத்தின் கீழ் 21 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலையில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தினை நோக்கி பெருமளவு கால்நடைகள் கொண்டு வரப்படுகின்றன.

இதன் காரணமாக பச்சிலைப்பள்ளியின் விவசாய முயற்சிகள் பாதிக்கப்படுவதுடன் இரவு வேளைகளில் பெருமளவு கால்நடைகள் ஏ-9 வீதியில் தங்குவதன் காரணமாக விபத்துகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

குறிப்பாக பொலிஸாரினால் கால்நடைகள் வளர்ப்போருக்கு அறிவுறுத்தப்பட்ட நிலையிலும் கால்நடைகள் வீதியில் தங்குகின்ற நிலைமை காணப்படுகிறது என தெரிவித்தனர். (4-5-350)

# காட்டு யானைகள் அட்டகாசம்

(அக்கராயன்)

மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் யானைகளைக் கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் பிரதேச செயலாளர்களிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தற்போது காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கையினை யானைகள் சேதமாக்கி வருவதாகவும் நிரம்பி உள்ள குளங்களின் வழியாக நீந்தி வரும் யானைகள் குளங்களின் அணைக்கட்டுகளை சேதப்படுத்தியும் வருகின்றன.

இதனைவிட கிராமங்களுக்குள் வருகை தரும் யானைகள் பயன் தரும் மரங்களை அழித்து வருவதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களம் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

யானைகளைக் கட்டுப்படுத்த யானை வெடிகளை கூடுதலாகப் பெற்றுத் தருவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5-350)

# பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் வீதிக்கு இறங்க நேரிடும்

## தேசிய நிர்மாண சங்கத்தின் வடமாகாண கிளைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசால் ஒப்பந்தம் வழங்கப்பட்டு செய்து முடிக்கப்பட்ட பல வேலைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமல் உள்ளது. மேலும் மாகாணங்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்ட நிதி வேலைக்கான கொடுப்பனவு அதிகமான ஒப்பந்ததாரர்களுக்கு இன்னும் முழுமையாக வழங்கப்படாது உள்ளதென இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் வடமாகாண கிளையின் தலைவர் அன்ரன் றேமன்ஸ் குரூஸ் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் திட்டங்கள் சிலவற்றை நிறுத்தி உள்ளமையால் பல வேலைகள் முடிவுறுத்தப்படாமல் உள்ளன. முடிவுறுத்தப்பட்ட வேலையிலும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இவ்வாறு பல பிரச்சினைகள் உள்ள எமது அங்கத்தவர்கள் பலர் தொழிலை தொடர்ந்து நடத்த முடியாமலும் வங்கிகளில் இருந்து எடுத்த கடன்களை கட்ட முடியாமலும் உள்ளனர். எமக்கு வேறு வழியில்லாமல் இந்த ஊடக சந்திப்பின் மூலம் எமது பிரச்சினைகளை வெளிகொண்டு வருகிறோம்.

இதற்கு பின்னும் எமக்கான தீர்வு கிடைக்கவில்லையாயின் நாம் வீதிகளில் இறங்கி போராடுவதை தவிர வேறு வழியில்லை. இதனால் ஒப்பந்ததாரர்கள் மட்டுமின்றி அது சார்ந்த பல தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுவர் எனவும் தெரிவித்தனர். (4-33)

# கால்நடைகளுக்கான தீவனத் தேடல்


**வர்த்தனி சுஸ்ருதன்**
விவசாயபீடம்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.


இந்தகால கட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சனத்தொகையானது உணவு உற்பத்திக்கு பாரிய சவாலாக அமைவதோடு மட்டுமன்றி எமது நாட்டில் பயிர்களை வளர்ப்பதற்காக பயன்படும் நிலம் மற்றும் நீர் நிலைகளிற்கான பேரட்டியினால் மக்கள் கால்நடைகளுக்கென்று தாவரங்களை வளர்ப்பதை தவிர்த்து வருகின்றனர்.

மேலும் இந்த பேரிடர் காலத்தில், காலநிலை மாற்றங்கள் மற்றும் அதிகரித்துவரும் தீவன விலையும் கால்நடைகளை வளர்ப்பதில் பாரிய சவால்களாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் கால்நடைகளுக்கான உணவிற்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது. குறிப்பாக வறண்ட காலங்களில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பாலுற்பத்தி குறைவடைவதுடன் உற்பத்திச் செலவும் அதிகரிக்கின்றது.

இதனை முகங்கொடுப்பதற்காக, சிறந்த புல்லுற்பத்தி முறைகளை கையாள்வதோடு, விவசாய உற்பத்தி உபபொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்களை சிறந்த முறையில் பயனுடையதாக மாற்றக் கூடிய பல்வேறு வழிமுறைகளைப் நாம் பின்பற்ற வேண்டிய கட்டாயம் தோன்றியுள்ளது.

அவற்றுள் மிகப் பிரபல்யமானது உலர் புல்லுற்பத்தி, "சைலேஜ்" எனப்படும் குழிகாப்புத்தீன் மற்றும் யூரியா பரிகரிக்கப்பட்ட வைக்கோல் உற்பத்தி என்பனவாகும்.

### புல் வளர்ப்பு

நல்லின புற்கள் மற்றும் அவரையினத் தாவரங்கள் என்பன பசுக்களிற்கு உணவாக பயன்படுத்தக் கூடிய சிறந்த தீவனமாகும். மழை காலங்களில் வறண்ட பிரதேசங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புற்கள் வளர்ப்பானது தீவனக் கேள்வியை நிவர்த்தி செய்யவும் மற்றும் வறண்ட காலங்களில் ஏற்படும் தட்டுப்பாட்டை குறைக்கவும் உதவும்.

ஏக்கருக்கு அதிக விளைச்சலினை தரும் சிறந்த போசணைக் கூறுகளுடைய புல்லினங்கள் மற்றும் அவரையினங்களைத் தெரிவு செய்வது மிக முக்கியமாகும்.

கலப்புநேப்பியர், சிக்னல் புல், கோரிப்புல், நீர்ப்புல், பிறிக்கேறியா இனங்கள், பச்சைபனிக்கம், வி.ஆர். ஐ 435 மற்றும் கினிவர்க்கங்கள் வறண்ட பிரதேசங்களிற்கு உகந்தவை.

அண்ணளவாக, ஏக்கருக்கு 2-5 கிலோகிராம் புல்லின விதைகளும் 2-10 கிலோகிராம் நடுத்தர அவரையினப் புல் விதைகளும் தேவை. மாறாக புல் துண்டங்களாயின், ஏக்கருக்கு 300-400 புற் துண்டங்கள் அவசியம்.

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கு உகந்த புல்லினங்கள்**

| வர்க்கங்கள் | நடுகை இடைவெளி (சென்றி மீற்றர்) | இனப்பெருக்கமுறை | அறுவடை இடைவெளி (நாட்கள்) | விளைச்சல் (தொன்/ஏக்கர்/வருடம்) |
|---|---|---|---|---|
| பிறிக்கேறியாமி யூரிக்கா | 30 × 45 | வேர்த்துண்டம், வெட்டுத்துண்டம் | 30 – 45 | 24 - 32 |
| கினி | 30 × 45 | வேர்த்துண்டம்,விதை | 35 – 40 | 32 - 36 |
| சிக்னல் புல் | 30 × 45 | வேர்த்துண்டம்,விதை | 30 – 45 | 40 - 44 |
| கலப்புநேப்பியர் (CO3) | 60 × 60 | வெட்டுத்துண்டம் | 35 – 45 | 10080 |
| பவ்வல் புல் | 30 × 30 | வேர்த்துண்டம்,விதை | 32 – 45 | 24 - 28 |

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கு உகந்த அவரையினங்கள்**

| வர்க்கங்கள் | நடுகை இடைவெளி (சென்றிமீற்றர்) | இனப்பெருக்கமுறை | அறுவடை இடைவெளி (நாட்கள்) | விளைச்சல் |
|---|---|---|---|---|
| ஸ்ரைலோ | 30 × 30 | விதை | 60 | 20 (தொன்/ஏக்கர்/வருடம்) |
| கிளிசிறீடியா | 200 × 200 | வெட்டுத்துண்டம்,விதை | 90 | 24 (கி.கிராம் / தாவரம்/வருடம்) |
| முள்முருங்கை | 200 × 250 | வெட்டுத்துண்டம்,விதை | 40 – 45 | 20 - 25 (கி.கிராம்/வருடம்) |
| இபில் இபில் | 20 × 80 | விதை | 90 | 6 (கி.கிராம் / தாவரம்/வருடம்) |

அவரையினப் புல்லும், சாதாரண புல்லும் சேர்த்து வளர்ப்பின் அதிக விளைச்சலினைப் பெறலாம். காரணம், அவரையினத் தாவரத்திலுள்ள ஒன்றிய வாழ் பக்றீரியாக்கள் மூலம் வளிமண்டல நைதரசன் பதிக்கப்படுவதால் புற்களுக்கு தேவையான நைதரசன் கிடைக்கப்படுவதாலாகும்.

மேலும் யூரியாவிற்கான கேள்வியும் குறைகின்றது. அவரையினப் புல் மற்றும் புற்களை வெவ்வேறு நிரையில் மாறி மாறி நடுவதன் மூலம் பீடை மற்றும் நோய்த் தாக்கத்தினை தவிர்க்கலாம்.



புற்களை பயிரிடுவதற்கு முன், நிலத்தினை நன்கு துப்புரவு செய்து உழுதல் வேண்டும். பின்பு உரிய தூர அளவுகளில் பாத்திகளை அமைத்து, அமைக்கப்பட்ட பாத்திகளில் எரு மற்றும் பசளைகளை இடுவதன் மூலம் விளைச்சளை அதிகரிக்கலாம்.

தண்டுத் துண்டங்களை பயன்படுத்தின், அதன் ஒரு கணு முற்றாக மண்ணினால் மூடுமாறு பாத்தியில் நடுதல் வேண்டும்.

தண்டு துண்டங்கள் நாட்டப்பட்டு 2-4 கிழமைகளில் உரமிடுதல் நன்று. பூப்பதற்கு முன்னதாக (4-6 வாரங்களினுள்) புற்களை தரை மட்டத்திலிருந்து 6 அங்குல உயரத்தில் வெட்டப்பட வேண்டும். மீண்டும் உரிய அறுவடை இடைவெளியில் புற்களை வெட்டலாம்.

### உலர் புல்லுற்பத்தி

உலர் புல் உற்பத்தி எனப்படுவது மேலதிகமாகக் கிடைக்கக் கூடிய புல்லை எதிர்கால தேவைக்காக பாதுகாக்கும் சிறந்த முறையாகும். சரியான நேரத்தில் வெட்டப்பட்டு உலர்த்தப்பட்ட புல்லை கால்நடை உணவாகப் பாவிக்க முடியும். உலர் புல்லில் 75-80 சதவீத உலர் பொருட்கள் அடங்கியுள்ளன. இது கன்றுகள் மற்றும் சினைப் பசுக்களுக்கு உகந்த உணவாகும். ஒரு ஏக்கரிலிருந்து ஒரு தடவையில் 750 கிலோ கிராம் உலர் புலினை குறைந்த செலவில் தயாரிக்கலாம். உலர் புல்லுற்பத்திக்கு பிறக்கேரியா, கினி மற்றும் பபில் இனங்கள் போன்ற புல்லினங்கள் மற்றும் அல்ப அல்பா, ஸ்ரைலோ சாந்தஸ் போன்ற அவரையினங்களைப் பயன்படுத்தலாம்.

உலர் புல் உற்பத்திக்கான செய்முறையானது மிகவும் இலகுவானது. முதலில் தாவரங்கள் பூப்பதற்கு ஆரம்பிக்கும் காலகட்டத்திற்கு முன் அவற்றை அறுவடை செய்து, நன்கு சூரிய ஒளி கிடைக்கும் இடத்தில் பரப்பி விடுதல் வேண்டும். பின்பு இறாக்கைகள் அல்லது வேலி அல்லது முக்காலிகளைப் பயன்படுத்தி, மேலும் நன்கு உலர வைக்க வேண்டும். நன்றாக உலர்வதற்காக 2-3 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை புல்லை புரட்டிவிட வேண்டும். மாலையில் புல்லைக் குவித்து தரப்பாளினால் நன்றாக மூடிவிடுவதன் மூலம் மழை மற்றும் பனியினால் ஏற்படும் பாதிப்பைக் தவிர்க்கலாம். புற்களை நன்றாக உலர்வதற்கு 1-3 நாட்கள் போதுமானது. நன்றாக உலர்ந்த புற்களை, கையினால் முறுக்கும் போது கைகளில் நீர்த்தன்மையை உணர்ந்தால், மேலும் நன்கு சூரிய ஒளியில் உலர்த்த வேண்டும். பின்பு அவற்றை இறுக்கமான கட்டுகளாகக்கட்டி 6-8 மாதங்கள் வரை ஈரப்பதனற்ற பகுதியில் சேமிக்கலாம்.

### சைலேஜ உற்பத்தி

இயற்கையான முறையில் காற்றின்றிய சூழலில் உணவுப் பயிர்களின் கழிவுகள், புற்கள் மற்றும் அவரை இனத் தாவரங்களை நொதிக்கச் செய்வதன் மூலம், அவற்றின் தரத்தை அதிகரிப்பதோடு, சமிபாடடையும் தன்மையும் மற்றும் சுவையையும் அதிகரிப்பதோடு அவற்றை நீண்டகாலம் சேமிக்கக் கூடிய வழிமுறையாகவும் அமைகின்றது. புற்கள், அவரை இனங்கள், சோளம், சிறு தானியப் பயிர்கள், விவசாயக் கழிவுகள் (இலைகள், தண்டுகள்), பழங்கள் மற்றும் அவற்றின் கழிவுகள் மற்றும் பிரதேச ரீதியாக அதிகளவில் கிடைக்கக் கூடிய தாவரங்கள் என்பவற்றை பயன்படுத்தி சைலேஜ் உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

சைலேஜ் உற்பத்தி செய்முறையானது இலகுவானதாயினும் மிகவும் கவனத்துடன் செய்ய வேண்டும். பூப்பதற்கு முன்னதாக புற்கள், அவரையின மற்றும் பிரதேச ரீதியாக அதிகளவில் கிடைக்கக் கூடிய தாவரங்களை அறுவடை செய்து, அவற்றை சிறு சிறு துண்டுகளாக (2.5-4 சென்ரி மீற்றர்) வெட்டி நன்கு சூரிய ஒளியில் உலர்த்த வேண்டும். சிறு துண்டுகளாக வெட்டிய தாவரப் பாகங்களை உள்ளங்கையில் 20 தொடக்கம் 30 செக்கன்கள் அழுத்தும் போது கைகளில் நீர்த்தன்மையை உணர்ந்தால், அவற்றை மேலும் நன்கு சூரிய ஒளியில் உலர்த்த வேண்டும் (30 சதவீத நீர்த்தன்மை உகந்தது).

பின் சைலேஜ் தயாரிப்பதற்காக பழுதுகளற்ற பாத்திரம் (பிளாஸ்ரிக்) அல்லது பொலித்தீன் பைகளைத் தெரிவு செய்து அதனை கழுவி நன்கு சூரிய ஒளியில் உலர்த்த வேண்டும்.

(200 லீற்றர் கொள்வனவுடைய பிளாஸ்ரிக் பீப்பாக்கள் மூலம் 100 கிலோகிராம் சைலேஜை தயாரிக்கலாம்). சிறு துண்டுகளாக வெட்டிய தாவரப் பாகங்களை பாத்திரத்தினுள்ள காற்று வெளியேறும் வரை அவற்றை அழுத்தமாக அடுக்கி, அமுக்க வேண்டும்.

(தொடரும்...)

# அதிகரிக்கும் குடும்ப வன்முறைகள்

## நாளொன்றிற்கு சுமார் 500 முறைப்பாடுகள்

**(கொழும்பு)**

**சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின், மகளிர் உதவி மத்திய நிலையத்தின் 1938 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு நாள் ஒன்றிற்கு சுமார் 400 முதல் 500 தொலைபேசி அழைப்புக்கள் வருவதாக தெரிவிக்கப் படுகிறது.**

சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின், மகளிர் உதவி மத்திய நிலையத்தின் அதிகாரி யான மானெல் ஜயமான்ன இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், "உள் வரும் அழைப்புகளில் 50% பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தொடர்பானவை. குடும்பங்களில் நிலவும் பொரு ளாதாரச் சிக்கல்கள் மற்றும் ஆண்கள் போதைப் பொரு ளுக்கு அடிமையாகி இருப்பது போன்ற காரணங்களால் இது போன்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வரு கிறது.

கொரோனாத்தொற்றுநோய் காரணமாக பயணக் கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலங்களில் இவ்வாறான அழைப்புகளின் எண்ணி க்கையும் அதிகரித்துள்ளது. மற்றும் ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் சுமார் 4,000 அழை ப்புகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளின் தன்மை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்த பின்னர் அவர்கள் குடும்ப ஆலோச னைச் சேவைகள் மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடி மையானவர்களை புனர் வாழ்வு செயல்முறை என்பவற் றிற்கு ஆலோசனைகள் வழங்க ப்படுகின்றன.

அத்துடன், பாரிய அசம்பா விதங்கள் ஏற்படுமிடத்து, பொலி ஸாரின் உதவியுடன் கடுமை யான சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனத்தெரிவித்தார். (நி)

# புதிய கொரோனா கொத்தணிகள் நாட்டில் அடையாளம்

(கொழும்பு)

நாட்டின் 5 மாவட்டங்களில் கொரோனா கொத்தணிகள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன இந்த விட யத்தினை தெரிவித்தார்.

அநுராதபுரம், அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங் களிலேயே இவ்வாறான கொத்தணிகள் கண்டறியப்ப ட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



சுகாதார நெறிமுறைகளை மீறி குறித்த பகுதிகளில் நடை பெறும் திருமணங்கள், மத நடவடிக்கைகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளால் இந்த கொத்த ணிகள் உருவாகியுள்ளதாக வும் நாடு இயல்பு நிலைக்கு வரும் வரை மக்கள் அதிக அள வில் ஒன்றுகூடும் நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி னார். (நி)

# கொரோனா மாத்திரையின் விலை 107,000 ரூபாய்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோய் சிகிச்சைக்கான பேக்ஸ்லோவிட் Paxlovid என்னும் மாத்திரையை அமெரி க்காவில் உள்ள பைஸர் நிறு வனம் உருவாக்கியுள்ளது.

இலங்கையில் இந்த ஒரு மாத்திரையின் விலை சுமார் 107,000 ரூபாய் என மதிப்பிடப் பட்டுள்ளது.

'பேக்ஸ்லோவிட்' Paxlovid என்னும் இந்த மாத்திரை யானது, வைத்தியசாலை களில் சேர்க்கும் அல்லது இறப்பு நிகழும் அபாயம் உள்ள நோயாளிகளுக்கு லேசானது முதல் மிதமானது வரையி லான கொரோனா பாதிப்புக்கு நிவாரணம் அளிக்கும் என பைஸர் நிறுவனம் தெரிவித் துள்ளது. (நி)

# தங்கத்தின் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

உலக அளவில் தங்கத்தின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விரைவில் 1,900 அமெரிக்க டொலர் வரை அதிகரிக்கும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி யுள்ள நிலையில், நேற்று முன் தினம் ஒரு அவுன்ஸ் தங்கம் 1,863 அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-5)

# போலி சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்த மூவர் கைது

(கொழும்பு)

போலி சாரதி அனுமதிப் பத்திரங்களை தயாரித்து, விற் பனை செய்து வந்த குற்றச்சாட் டில் ஆட்டுப்பட்டித்தெரு பொலி ஸார் மூவரை கைது செய்த னர்.

வத்தளை மற்றும் தெஹி வளை பகுதிகளைச் சேர்ந்த சந்தேக நபர்களின் வீடுகளில் வைத்தே இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளமை விசாரணை களில் தெரியவந்துள்ளது.



சந்தேக நபர்கள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள னர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## நல்ல நண்பனாக நடந்து கொள்வது எப்படி?

நமக்கு எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கை முக்கியமானதல்ல. ஆனால் நம்மிடம் நட்பு வைத்திருப்பதைப் பெருமையாக எண்ணி மகிழ்ச்சி அடைபவர்கள் எத்தனைபேர் என்ற எண்ணிக்கையே மிகமிக முக்கியமானது.

நம் மனவேதனைகளைக் கொட்டித் தீர்க்கவும் ஆபத்துக்காலத்தில் உதவவும் அரிய பல யோச னைகளைச் சொல்லவும் நமக்கு நல்ல நண்பர் கள் தேவை. அவர்களை நாம் தாம் வலியச் சென்று சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

நட்பில் சுயநலம் இருக்கக்கூடாது. எந்தவித மான எதிர்கால வரவேற்புகளும் அதில் இழை யோடிக் கொண்டிருக்கக்கூடாது. பயன் கருதாத நட்பே பல நாள் நீடிக்கும்.

நண்பர்களிடம் காணப்படும் குற்றம் குறை களைப் பெரிதுபடுத்தக்கூடாது. நூற்றுக்கு நூறு நாம் விரும்பும்படி நண்பர்கள் கிடைக்க மாட்டார்கள். மனிதர்கள் குறைபாடு உடையவர்கள். இந்த உண்மையை உணர்ந்து சரி சரி என்று போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

நண்பனின் சிறப்பியல்புகளைப் பலர் முன் பாரா ட்ட வேண்டும். தவறுகளைத் தனியே சுட்டிக்காட்ட வேண்டும். நண்பனுக்கு அந்த நேரத்தில் எரிச்சல் ஏற்பட்டாலும் அனுபவபூர்வமாக அவன் உண் மையை உணரும் போது நமக்கு நன்மை ஏற்பட வேண்டும் என்று தானே சொன்னான் என்று உணர்வான். நட்பு இறுகும்.

இடையிலே இருப்பவர்கள் இழுத்து விட்டு வேடி க்கை பார்ப்பார்கள். இவர்களுக்கு இடம் கொடுக் கவே கூடாது. நண்பன் உங்களைப்பற்றி தவறா கவே சொல்லியிருந்தாலும் உண்மையை நண் பனிடமே போட்டு உடைத்து நீ இப்படியெல்லாம் சொல்லியிருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரி யும் என்று சொல்லிப் பெருந்தன்மையாக நடந்து கொள்ள வேண்டும். நண்பன் போக்கில் நல்ல தொரு மாற்றம் ஏற்படும்.

நண்பன் உதவி நாடி வருமுன் குறிப்பறிந்து வலியச் சென்று உதவ வேண்டும்.

நடந்துவிட்ட சம்பவங்களில் நம் பங்கில் தவறு இருந்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும். தங்கள் குறையை உணர்ந்து மன்னிப்புக் கேட்காதவர்கள் நட்புச் செல்வத்தை இழப்பதோடு தங்கள் எதிர்கால வாழ்வையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

கணவன்– மனைவிக்கு இடையே உள்ள பிணைப்புக்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடியது நட்பு ஒன்றுதான். அது ஒப்பந்தத்தால் ஏற்படுத்திக் கொள்ளாத உன்னத உறவு. அந்த உறவில் சிறு சிறு சலனங்களுக்கு இடமில்லை. சிறிய விடயங் கள் முதல் பெரிய விடயங்கள் வரை விட்டுக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக பலன் தரா. ஆனால் என்றேனும் ஒருநாள் நிச்ச யமாக இவற்றின் பலனை உணரும் நாள் வரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தம் முன்னேற்றத் தில் நீங்கள் மிகுந்த அக்கறை உள்ளவர் என்ற எண்ணத்தை நண்பரின் மனத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இது உங்களால் முடியுமானால் உங்கள் நண் பரின் நண்பர்கள் பட்டியலில் உங்கள் பெயர் முதல் இடத்தைப் பெறுவது நிச்சயம்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்


## பூனைகளைச் சிறைப்படுத்திய எலிகள்

"இதுதான் சரியான சமயம். நாம் மலைக் கோயிலுக்குச் சென்று வந்துவிடலாம்" எனக் கூறியபடி ஆபிரிக்க எலிகள் கிளம்பின. மலைக்கோயிலுக் குள் நுழைந்ததும் கோயிலின் வாசலைத் தேடின எலிகள். கொஞ்ச தூரத்தில் வாசல் தென்பட்டது.

ஆனால், அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது. வெளியே கதவைத் திறக்க முடியாதபடி கற்கள் கொட்டப்பட்டிருந்தன.

உள்ளே இருந்து 'மியாவ்...மியாவ்....' எனச் சத்தம் கேட்டது. ஆபிரிக்க எலிகளுக்குத் திடுக் என்றது. கற்குவியலின் மீது ஏறிச் சிறிய ஓட்டைக்குள் இருந்து இரு எலிகளும் எட்டிப் பார்த்தன. அங்கே ஒரே பூனைக் கூட்டம்.

அங்கு பூனைகளின் தலைவர், எலிகளை எப்படிப் பிடிப்பது எனக் குட்டிப் பூனைகளுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தது.



ஆபிரிக்க எலிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவை சத்தம் போடாமல் வந்து மற்ற எலிகளுடன் படுத்துக் கொண்டன.

"இதை யாரிடம் கேட்பது?" என இரு எலிகளும் யோசித்தன. அருகில் தூங்காமல் விளையாடிக் கொண்டிருந்த குட்டி எலியிடம் விசாரணையைத் தொடங்கின.

"தனக்கு எதுவுமே தெரியாது" எனக் குட்டி எலி சத்தியம் செய்தது. மீண்டும் மீண்டும் கேட்கவே, உண்மையைக் கூறியது குட்டி எலி.

"நாங்கள் அனைவரும் ஒருநாள் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது பூனைகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடி வந்து எங்களைப் பயமுறுத்தின. அவைகளைத் திசை திருப்புவதற்காகப் பூனைகளுடன் நண்பராகப் பழகி, நாடகம் ஒன்றை நடத்தினோம். அதனை உண்மை என்று பூனைகள் நம்பிவிட்டன" என்றது.


"நாடகமா? அது என்ன?" என்று கேட்டன ஆபிரிக்க எலிகள். "பூனைகள் எலிகளைப் பிடிப்பதற்குத் துரத்த வேண்டி இருக்கிறது. அதோ தெரிகிற அந்த மலைக்கோயிலில் ஒரு மாத காலம் ஒரே இடத்தில் அமர்ந்து சாப்பிடாமல் விரதம் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவைகளால் பறவைகளைப் போலப் பறக்க முடியும். வானில் பறக்கும் பறவைகளைக் கூட எளிதாகப் பிடித்து உண்ணலாம் என்றோம். அதை உண்மை என்று பூனைகள் நம்பிவிட்டன. அதனால் ஊரில் உள்ள எல்லாப் பூனைகளும் இப்போது விரதத்தில் இருக்கின்றன. யாருடைய தொல்லையும் இருக்கக் கூடாது என்பதற்காகப் பூனைகள் கதவை உள் பக்கம் பூட்டிக் கொண்டன. இதுதான் சமயம் என நாங்கள் பூனைகள் வெளியே வராதபடி கற்களை அடுக்கிவிட்டோம்" என்றது குட்டி எலி.

"இது தப்பு இல்லையா? பூனைகளிடம் இருந்து தப்பிக்க நேர்மையான வழியை நாம் பின்பற்ற வேண்டும். நம்மைப் போன்ற ஒரு ஜீவனை ஏமாற்றக்கூடாது. ஆகையால், நாங்கள் கதவைத் திறக்கப் போகிறோம்" எனக் கூறி மலைக்கோயிலை நோக்கி ஆபிரிக்க எலிகள் சென்றன. கற்களை அப்புறப் படுத்தின.

ஒருமாத காலம் அமைதி காத்த பூனைகள், எலிகளின் வாசனை தெரிந்தவுடன் அவற்றின் மீது பாய்ந்தன. தப்பித்தோம் பிழைத்தோம் என ஆபிரிக்க எலிகள் ஓடி மறைந்தன. பூனைகள் ஊருக்குள் புகுந்து எலிகளைப் பிடித்துச் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொண்டன. (முற்றும்)

# மகாபாரதம்

**250**



உலகத்தின் எல்லாப் பக்கங்களிலும் கிழத்தன்மை சூழ்ந்திருக்கிறது. இந்த நிலையில் எமன் விழிப்பாக உயிர் இனங்களைக் கவனித்து வருகிறான். இதை எண்ணிப் பார்க்க பயமாய் இருக்கிறது. எமன் உலகத்தை ஒவ்வொரு விநாடியும் அழித்துக் கொண்டிருக்கிறான்.

இரவும், பகலும் ஒருவரின் ஆயுளை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் மரண வலையில் சிக்கியிருக்கும் துன்பத்தை இன்பமாக மாற்றுவது எப்படி என சிந்திக்கிறேன்.

எவன் ஒரு நாளில் எந்த நல்ல செயலையும் செய்யவில்லையோ அந்த நாள் பயனற்ற நாள் என அவன் தெளிதல் வேண்டும். நமது இலட்சியங்கள் நிறைவேறுவதற்கு முன்னரே எமன் நம்மை தொடருகிறான்.

ஒவ்வொரு நாளும், நம் வாழ்நாள் குறைந்து கொண்டே வருகிறது. ஆழமற்ற நீர்நிலையில் வாழும் மீன் இன்பத்தை அடையாதது போல மக்கள் இன்பத்தைப் பெற முடிவதில்லை.

நிம்மதியாகப் புல்லை மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டைச் செந்நாய் கவர்ந்து செல்வது போல மனிதனை எமன் கவர்ந்து செல்கிறான். ஆதலால் செய்ய வேண்டிய நல் அறங்களை இப்போதே செய்து விட வேண்டும்.

ஏனெனில் "இந்த நல்ல காரியம் முடியவில்லையே, பாவம் என எமன் காத்துக் கொண்டிருக்கமாட்டான். எப்போது நம் வாழ்நாள் முடியும் என யாராலும் சொல்ல முடியாது. ஆகவே எப்போதும் நல்ல செயல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

புண்ணியச் செயல்களால் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் உண்டாகும். எப்போதும் தன் குடும்பம் தன் குடும்பம் என அலைந்து திரிபவன் தகாத செயல்களிலும் ஈடுபடுவான்.

குடும்ப நலன் கருதிக் காலப்போக்கில் பாவத்தைச் செய்யவும் தயங்கமாட்டான். அத்தகைய அறக்கேடனை, உறங்கும் விலங்கைப் புலி கவர்ந்து செல்வது போல எமன் கவர்ந்து செல்வான்.

வீடு, மனை, தோட்டம், செல்வம் என அவற்றைச் சேர்ப்பதிலேயே கவனம் செலுத்தும் மன்னன் அவற்றை அனுபவிப்பதற்கு முன்னமே எமனால் கவரப்படுகிறான். அறிஞன்-அறிவிலி. வீரன்-கோழை, மன்னன் - சாதாரண மனிதன் என எவ்வித பாகுபாடுமின்றி எல்லோரையும் அவர்கள் செயல் முடிவதற்குள், அவர்கள் ஆயுளை முடித்து விடுகிறான் எமன்.

பிற உயிர்க்கு துன்பம் செய்யாதவனை எந்த உயிரும் துன்புறுத்துவதில்லை. பசி, மூப்பு, பிணி ஆகிய இவை எமனின் படை வீரர்கள் என்பதை உணர வேண்டும். இப்படை வீரர்களைத் தடுக்கும் சிறந்த கருவி சத்தியம் என்னும் வாய்மையாகும்.

வாய்மை அல்லாதவற்றை விலக்க வேண்டும். முக்தி என்பது வாய்மையிலேயே நிலைத்துள்ளது. ஐம்புலன்களையும் அடக்கி வாய்மையை போற்றும் ஒருவனாலேயே எமனை எதிர்த்து நிற்க முடியும். (தொடரும்)

*வாழ்க்கையின் கடந்த காலம் சென்றுவிட்டது. வருங்காலம் சந்தேகம் நிறைந்தது. எனவே, இருக்கும் காலத்திலேயே செயலாற்றிக் கொள்.*
*– ஹஸ்ரத் அலி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுணைக்கெட்டு விட்ட கொரோனாத் தொற்று

நாடு முழுமையிலும் கொரோனாத் தொற்று மீண்டும் விஸ்வரூபமெடுக்கத் தலைப்பட்டுள்ளது.

அதிலும் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று வேகமெடுப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

ஆக, இன்னொரு கொரோனாப் பேரலைக்கு மக்கள் முகங்கொடுக்கப் போகின்றனர் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

அதிலும் குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகக் கூடிய சூழ்நிலை உள்ளதென்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம்.

அதாவது பாடசாலைகள் ஆரம்பமாகியிருக்கின்ற இந்த வேளையில், மாணவர் கள் வகுப்பறைகளில் கூடியிருந்து கற்கின்றபோது கொரோனாத் தொற்றுப் பரவுகின்ற வாய்ப்பு அதிகமெனலாம்.

தவிர, மாணவர்களுக்கு கொரோனாத் தொற்றுக்குரிய அறிகுறிகள் ஏற்பட்டாலும் அஃது மழை காலத்தில் ஏற்படக்கூடிய சளி, காய்ச்சல் என அனுமானித்து சம்பந்தப்பட்ட மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புகின்ற நடைமுறையும் இருக்கவே செய்யும்.

இதற்கு மேலாக, வீட்டில் குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையிலும் பாடசாலைக்குச் செல்லாமல் விடுவதன் மூலம் கல்வியை இழக்க வேண்டியதாக இருக்கும் என்பதால் வீட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுப் பற்றி வெளிப்படுத்தாமல், மாணவர்கள் பாடசாலைக்கு செல்லக்கூடிய சாத்தியங்களும் உண்டு.

இவ்வாறானதொரு கட்டத்தில் கொரோனாத் தொற்றின் பரவுகை பன்மடங்காக அதிகரிக்கக்கூடிய சூழல் ஏற்படவே செய்யும்.

ஆக, சுருங்கக்கூறின் கடந்த இரண்டு வருடங்களாக கொரோனாத் தொற்றுடன் வாழப் பழகிய எமக்கு கொரோனா பற்றிய பயம் இல்லாமல் போயிற்று எனலாம்.

இதனை இன்னொரு வகையில் கூறுவதாயின், எங்களைப் பொறுத்தவரை கொரோனா சுணைக்கெட்டுவிட்டது.

அதாவது கொரோனாத் தொற்றால் ஏற்படக்கூடிய மரணங்கள், உடல் பாதிப்புகள் மற்றும் பின்விளைவுகள் குறித்து நம் இம்மியும் சிந்திக்கவில்லை.

ஏதோ, தடை மருந்து ஏற்றியுள்ளோம். அதனால் எங்களை கொரோனாத் தொற்றுத் தாக்காது. அவ்வாறு தாக்கினாலும் அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்ற மன நிலைக்கு நாம் வந்துவிட்டபோது, எதிர்காலம் மிகவும் அபாயமாகவே அமையும்.

எனினும் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்தி, அவர்கள் மூலமாக; அதனைக் கட்டுப்படுத்துகின்ற நடைமுறைகளை பின்பற்ற வைக்க முடியும்.

ஆகையால், ஒவ்வொரு காலைப் பிரார்த்தனையின்போதும் கொரோனா பற்றிய விழிப்புணர்வும் உடனுக்குடனான தகவல்களும் மாணவர்களைச் சென்றடைவது அவசியம்.

இதன்மூலம் கொரோனாவை மீண்டும் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

# நடப்பு அமைச்சரவை சட்டவிரோதமானது; உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதியினால் தற்போதைய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது என அறிவித்து அதன் செயற்பாடுகளை கைவிடுமாறு கோரி தடை உத்தரவைப் பிறப்பிக்க உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சங்கவியலாளர்களின் தேசிய முன்னணியின் செயலாளர் கபில ரேணுகவினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது அமைச்சரவைக்கான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது அரசியலமைப்பின் 47-1 - அ மற்றும் ஆ சரத்துக்களுக்கு முரணானது எனக் குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிவாதிகளாக அமைச்சரவை, சகல இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி செயலாளர் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 82 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். (ஞா)

# தென்மராட்சியில் கொரோனாவால் 16 நாட்களில் நால்வர் மரணம்

## 118 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 16 நாட்களில் 118 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 4 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார தரப்பினர் கூறியுள்ளனர்.

தினமும் சராசரியாக 8 முதல் 10 தொற்றாளர்கள் என்றளவில் எண்ணிக்கை உயரத் தொடங்கிவிட்டதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சுகாதார நடைமுறைகளை மக்கள் இறுக்கமாகப் பின்பற்றாமை காரணமாக சமூகத்தில் தொற்று தீவிரமாகப் பரவியிருப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் நோய் அறிகுறிகளுடன் தாமாக வந்து அன்டிஜன் பரிசோதனைக்கு தம்மை உட்படுத்திக்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலவச துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் அறிவித்துள்ளனர். (ஞா)

# சாவகச்சேரிப் பகுதியில் குடும்பஸ்தர் திடீர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த 54 வயதான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் திடீர் சுகயீனம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 54 வயதான ராமு என்பவரே இவ்வாறு திடீர் சுகயீனம் ஏற்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பீ.சி.ஆர் பரிசோதனை முடிவுகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஞா-30)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடு களை விடச் சிறந்தது எதுவும் இல்லை."**

**-சார்ல்ஸ் டார்வின்**
**(பரிணாமவியலின் தந்தை)**

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** செல்வமஹால் திரு மண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறிச் சந்தி, சிவப்பிரகாசம் வீதி, ஞான பண்டிதா பாடசாலை கொக்குவில், மாவடி திரு நெல்வேலி, நந்தாவில், பிரம்படி, கொக்குவில், சைலோ கோயில் வீதி, பொக்ஸ் ரெஸ்ட் (பிறைவேற்) லிமிட்டெட், மருத்துவபீடம், அச்சுகூடம், கே.கே.எஸ். வீதி, மருத்துவ பீட அரங்கம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 68 ஆவது பிரிவு- டயலொக் கோபுரம் இரணைப்பாலை, தேவிபுரம், டயலொக் கோபுரம்- வள்ளிபுனம் புதுக்குடியிருப்பு, இடைக்காட்டுச் சந்தி, இனியவாழ்வு இல்லம், இருட்டுமடு, குறவில் உடையார்கட்டு, மூங்கிலாறு வடக்கு, சுதந்திரபுரம், தேராவில், உடையார்கட்டு, உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு பாடசாலையடி, வள்ளிபுனம், வெள்ளப்பள்ளம் உடையார் கட்டு, 18 ஆவது வி.ஐ.ஆர். இராணுவ முகாம்- தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவமுகாம் இரணைப்பாலை, 683 ஆம் பிரிவு இராணுவ முகாம் தேராவில், வெள் ளப்பள்ளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம்தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## செயலில் அன்பிருக்கட்டும்

❖ தாயும், தந்தையும் எப்போது மகிழ்ச்சி அடைகிறார்களோ, அப்போது கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார். அதனால், பெற்றோர் பெருமை கொள்ளும் விதத்தில் வாழுங்கள்.

❖ அறிவோடு ஒன்றிவிடும்போது தான் பிழைகளைப் போக்க முடியும். இந்த முடிவை அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது.

❖ தன்னைத் தானே வெறுக்கத் தொடங்கும் மனிதனுக்கு, அழிவுக்கான வாசல்கள் திறக்கப்பட்டு விட்டதாகப் பொருள்.

❖ அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை கொண்டு வந்தே தீரும்.

❖ தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப்போல, அதை விலக்கும் சக்தியும் மனதிற்கு உண்டு. அதனால் வேண்டியதை ஏற்கவும், வேண்டாதவற்றை தள்ளவும் செய்யுங்கள்.

❖ கருணையே இனிமையான சொர்க்கம். மக்கள் அனைவரும் கருணை நிறைந்தவர்களாக மாறினால் பூமியே சொர்க்கமாகி விடும்.

❖ ஒன்றைப் பெற்றுக் கொள்பவனுக்குப் பெருமையில்லை. கொடுப்பவன் தான் பேறு பெற்றவனாகிறான்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

19

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**நீங்களும் முயற்சிக்கலாம் 14**

XFHHΔΔΓIIன்

பெறுமானம் என்ன?

விடை

1000+500+100x2+10x2+5+2

=1727

## அட்டிக் எண்கள்

### பிராமி எழுத்துக்கள்

பிராமி என்பது ஒரு பழங்கால எழுத்து முறையாகும். இது பிராமி குடும்பத்தை சார்ந்த எழுத்து முறைகளிலேயே பழையதும் மூலமுமான எழுத்து முறையாகும். இது பழங் காலத்தில் தெற்காசியா முழுவதும் வழக்கத்தில் இருந்தது.

அசோகரின் 3 ஆம் நூற்றாண்டு காலத்திய கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களிலேயே எழுதுப்பட்டுள் ளன. அக்கல்வெட்டுகளில் பிராமி எண்களும் காணப்படுகின்றன. நேபாளத்தின் லும்பினியில் பிராமி எண் சின்னங்கள் காணப்படு கின்றன.

பிராமியும், கரோஸ்தியும் தான் இந்தியாவின் பழம்பெரும் எழுத்து முறைகள் ஆகும். கரோஷ்டி ஆப்கானிஸ்தானிலும் வடமேற்கு இந்தியாவிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், பிராமியோ இந்திய துணைக் கண்டம் முழுதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. காலப்போக்கில் பிராமி பல எழுத்து முறைகளால் திரிபடைந்து விட்டது.

கரோஸ்திய சுவடு ஏதும் இல்லாமல் மறைந்து போய்விட்டது. பிராமி, ஆதிகால பிராகிருத மொழிகளை எழுதப் பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலும் கல்வெட்டுகளிலும் சமய நூல்களை எழுதவுமே இந்த எழுத்து முறை பயன்படுத்தப்பட்டது. சமஸ்கிருதம் சில நூற்றாண்டுகள் கழித்தே எழுதப்படத் துவங்கியதால், சமஸ்கிருதத்தில் உள்ள பல ஒலிகளுக்கு (ரு.லு முதலியன) பிராமியில் எழுத்து வடிவங்கள் கிடையாது.

பிராமி எழுத்து முறையில் இருந்து பல்வேறு எழுத்து முறைகள் தோன்றியுள்ளன. தென்னிந்தியாவில் வட்ட வடிவ முறையிலும் வட இந்தியாவில் கோணமான வடிவிலும் மாறியது.

பிராமியில் இருந்து தோன்றிய எழுத்து முறைகள் இந்தியா, வங்க தேசம், இலங்கை, நேபாளம், பூட்டான், திபெத், பர்மா, தாய்லாந்து, லாவோஸ், இந்தோனேசியாவில் சில பகுதிகள், தென் சீனா, தென் வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் எழுத்து முறைகள் கருதப்படுகிறது. பௌத்த நூல்களின் எழுத்து முறையாக, பிராமிய எழுத்து முறைகள் சீனா, கொரியா மற்றும் வியட்நாமில் பயன்பாட்டில் உள்ளன. சர்சைக்குரியதாக, கொரிய ஹங்குல் எழுத்து முறையும் பிராமிய எழுத்து முறையாக கருதப்படுகிறது.

ரைஸ் டேவிட் என்ற பாலி மொழி அறிஞர் பிராமி எழுத்து முறை மத்திய ஆசிய வணிகர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றார். கல்வெட்டுகளில் பொறிப்பதற்காகவே பிராமி எழுத்துமுறை அசோகரால் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் சிலர் கருது கின்றனர்.


ஹன்டர் மற்றும் ரேமெண்ட் என்ற ஆங்கிலேய அறிஞர்கள், பிராமி எழுத்து முறை முற்றிலும் இந்தியாவிலிருந்தே தோன்றியது எனவும், அது சிந்து சமவெளி எழுத்துக்களிலிருந்து தோன்றியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர். மேலும் சிலரும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சில தமிழ் அறிஞர்கள், பிராமி என்பது தமிழர்களது எழுத்து முறை யென்றும், அதையே அசோகர் மாற்றம் செய்து பிராகிருதம் எழுதக் கூடிய எழுத்து முறையாக உருவாக்கினர் எனக் கருதுகின்றனர். மேலும் அவர்கள் பிராமியை "தமிழி" என அழைக்க வேண்டும் எனக் கூறினர்.


### பிராமி எண்கள் அமைப்பு (Brahmi numerals system)

பிராமி எண்கள் அமைப்பு (Brahmi numerals system) என்பது 3 ஆம் நூற்றாண்டிலிருந்து சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பூர்வீக தெற்காசிய துணைக் கண்ட எண் முறைமையாகும். இது எண்களை எழுதுவதற்கான ஒரு பழங்கால அமைப்பு ஆகும். இந்த எண் முறைமையில் இருந்தே தற்போதைய இந்து-அரபு எண்முறைமை தோன்றியதாக கருதப்படுகிறது.


அட்டவணை A பிராமி எண்முறைமையும் அதன் மரபுவழிவந்த எண்முறைமைகளும்




உரு 10 பிராமி எண்முறைமை




அட்டவணை B பிராமி எண்களின் வெவ்வேறு வடிவங்கள்




டேவிட் பர்டன் என்பவர் தனது ஆய்வின் மூலம் பிராமி எண்கள் வெவ்வேறு கட்டங்களில் எவ்வாறு மாற்றம் அடைந்து இந்து அரபு எண்கள் தோன்றின என்பதை விபரித்துள்ளார்.

அதனை சுருக்கமாக அட்டவணை A காட்டுகிறது. பிராமி எண்களின் வெவ்வேறு வடிவங்களை அட்டவணை B காட்டுகிறது. பிராமி எண்களுக்கு பயன்படுத்தப்பட்ட குறிகள் உரு 10 இல் காட்டப்பட்டுள்ளது.

### எத்துருசிய எண்கள் (Etruscan numerals) (கி.மு. 900 ஆண்டுகள் முந்தையது)

எத்துருசிய எண்கள் என்பது எட்ரூஸ்கான் மொழியின் எண்களுக்கான சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் மற்றும் அவற்றை எழுத பயன்படுத்தப்படும் இலக்கங்கள் போன்றவையாகும். (தொடரும்)

## மரணம் - 14...

எதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் நேற்று முன் தினம் உயிரிழந்தவர்களாவர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14,086 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நாட்டில் மேலும் 745 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 555,204 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## கிளிநொச்சியில்...

ணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது குறித்த இடியன் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிருஸ்ணபுரம் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள பாலத்தின் உட்பகுதியிலிருந்தே குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட துப்பாக்கி கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

மெகா பவர்
திகதி 19/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0939
T 09 11 55 58 65

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/11/19 1635 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 25 27 48 60

மஹஜன சம்பத
திகதி 2021/11/19
சீட்டிழுப்பு இலக்கம் 4591
H 5 6 1 3 2 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2886
E 06 10 12 74

தன நிதானய
திகதி - 2021.11.19
சீட்டிழுப்பு இலக்கம் - 621
R 21 26 36 73

## டெல்டா...

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல் துறை பிரிவின் பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் பீ.1.617.2.28 என்ற டெல்டா உப வைரஸ் திரிபு நாட்டில் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் தற்போது பீ.1.617.2.104 என்ற டெல்டா உப வைரஸ் திரிபான டெல்டா உப பரம்பரை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது மற்றுமொரு டெல்டா உப வைரஸ் திரிபான டெல்டா உப பரம்பரை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக வைத்தியர் சந்திம [illegible]

## பாடசாலைகளை...

தார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கும்போது, "நாம் எம்மால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளோம். அனைத்து பாடசாலைகளுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்லது இரு குழுக்களாக பிரித்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் பாடசாலைகளை நடத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்" என்று தெரிவித்தார். (ஞா)

## கிணற்றிலிருந்து...

இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் கடந்த சில தினங்களாக காணாமல் போயிருந்த நிலையில் உறவினர்கள் இவரை தேடி வந்துள்ளனர்.

காணாமல் போனமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் உயரப்புலம் பகுதியில் உள்ள பொதுக்கிணற்றில் இருந்து முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-18,33,104)

## துயிலுமில்லத்...

சுடர் ஏற்றும்பீடம், இனந்தெரியாதோரினால் இடித்து தழிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக மாவீரர் துயி லும் இல்ல ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

பல வருடங்களாக இருந்த இந்த பொதுச்சுடர் ஏற்றும் பீடத்தை சற்றும் மனிதாபிமானம் இன்றி மிலேச்சத்தனமான முறையில் உடைத்து சேதப்படுத்தி உள்ளனர் என்று குறித்த ஏற்பாட்டுக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இச்சம்பவம் மாவீரர்களின் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது. (ஞா-285)

## மாவீரர்...

எல்லையிலும் மாவீரர் நாளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டது.

குற்றவியல் சட்டத்தின் 120ஆவது பிரிவுக்கு அமையவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின்படியும் இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். இந்த மனு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி. சிவலிங்கம் முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நாளை தொடக்கம் வரும் 28ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு நடத்த தடை உத்தரவு நீதிமன்றினால் வழங்கப்பட்டது.

இதேவேளை மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுப்பதற்கு 51 பேருக்கு கிளிநொச்சி நீதிமன்றில் தடையுத்தரவு நேற்று பெறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் இவ்வாறு தடையுத்தரவு நேற்றைய தினம் பெறப்பட்டுள்ளது. (ஞா-18,33,100,316)

## கொரோனாத்...

லையில் இறந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

நெல்லியடி முருகமூர்த்தி வீதியை சேர்ந்த 74 வயதுடைய முதியவரே இவ்வாறு கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இதில் மட்டுவில் தெற்கு சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 38 வயதான இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை மூச்சு விடச் சிரமப்பட்ட இளைஞன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

இதில் கொழும்புத்துறையைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவரின் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ஞா-30,33,60)

## மாகா...

எனினும் தற்போதைய அரசாங்கம் விரைவில் மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்குத் தேவையான புதிய சட்டங்களை இயற்றுவதற்கு இயன்றவரை முயற்சி செய்து வருவதாக அவர் நேற்று பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுப்பிய கேள்வி தொடர்பில் தெளிவுபடுத்தியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். (ஞா)

## வடக்கிற்கு...

ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர்.

அந்தவகையில் இன்று வவுனியா மாவட்ட செயலகத்திலும், நாளை யாழ்ப்பாணத்திலும், நாளை மறுதினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும், மாலை கிளிநொச்சி திறன் மேம்பாட்டு மையத்திலும் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## மாவீரர் வாரம்...

கிழக்கில் பெரும்பாலான நீதிமன் றங்கள் தடைவிதித்துள்ளன. (ஞா)

## இருபாலையில்...

சின்னையா அழகானந்தம் (வயது-77) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் பருத்தித்துறை வீதியால் சென்று கொண்டிருந்தபோது இருபாலைப் பகுதியில் பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ஞா)

அத கோடிபதி
தினம்: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1394
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 19.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,980,280
வெற்றி இலக்கங்கள் 35 37 59 60 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
தினம்: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3729
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 19.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 3,739,540
வெற்றி இலக்கங்கள் 24 42 54 68 D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

H 06 09 46 66
767
19.11.2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,614,755/-
Web: www.dlb.lk

திகதி 19.11.2021
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
வெற்றி வாரம் 3280
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 07 10 29 கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,209,380/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1568 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 19.11.2021 தினம் வெள்ளி
G 36 39 58 59
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 70,799,921/=

# விசுவமடுவில் விபத்து; இளைஞன் படுகாயம்

(கிளிநொச்சி)

விசுவமடு றெட்பானா சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

றெட்பானா சந்திப் பகுதியில் உள்ள வீதித் தடைப் பகுதியில் நேற்று இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. (ஞா)

அதிகரித்துச் செல்லும் கோவிட் தொற்று

# யாழ்.மாவட்ட கொரோனா தடுப்பு செயலணி செவ்வாயன்று கூடுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மாவட்ட கொரோனா செயலணி எதிர்வரும் செவ்வாய் காலை 10 மணிக்கு கூடி நிலைமைகளை ஆராயவுள்ளது.



இது குறித்து மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் இணைத் தலைவரும் மாவட்டச் செயலருமான க.மகேசன் கூறியுள்ளதாவது,

சுகாதாரப் பிரிவினர் மற்றும் ஏனைய துறைசார் அதிகாரிகளுடன் குறித்த செயலணி கூட்டம் இடம்பெறவுள்ளது.

குறித்த செயலணிக் கூட்டத்தின்போது யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள நிலைமையில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதன் காரணமாக டெங்கு தொற்று நிலைமை மற்றும் அனர்த்த முகாமைத்துவ விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளதாக தெரிவித்தார். (ஞா)

# பாடசாலைகளுக்கான விசேட சுகாதார வழிகாட்டல் வெளியீடு

(கொழும்பு)

பாடசாலைகளுக்கான விசேட சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன கூறியிருக்கின்றார்.

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளின் அனைத்து வகுப்புக்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் வாரம் முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் கோவிட் தொற்றுக்குள்ளாகும் பட்சத்தில், செயற்படும் விதம் தொடர்பிலும் புதிய சுகாதார வழிகாட்டியில் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.

இதேவேளை, நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கோவிட் பூஸ்டர் தடுப்பூசியை செலுத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். (ஞா)


## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8689)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான கல்லூரிக்கு பின்வரும் பதவி நிலைக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

• French Language Teacher

முன் அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

மேற்குறித்த பதவியில் பணியாற்ற விரும்புவர்கள் தங்கள் தொழில் அனுபவம் மற்றும் கல்வித்தகமையை குறிப்பிட்டு சுயவிபரக்கோவையை WhatsApp or e-mail க்கு அனுப்பி வைக்கவும் (C-3056)

lankaguideedu@gmail.com WhatsApp 0761354500

## வீட்டு வேலையாட்கள் தேவையா?

வயோதிபர், சிறுவர் பராமரிப்பு போன்றவற்றிற்கு பொருத்தமான வேலையாட்களை எம்மிடம் கட்டணப் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

## வீட்டு வேலையாட்கள் தேவை

வயோதிபர், சிறுவர் பராமரிப்பு வேலைகள் செய்யக்கூடியவர்களுக்கு எம்மிடம் வேலை வாய்ப்புகள் உள்ளன. இவ் வேலை வாய்ப்புகளை எம்மிடம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். (8696)

DEWMAS 074 138 3368

## பௌதிகவியல் (Physics)

2022, 2023 உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். (personal and group classes) (8691)

076 157 0107

## கணிதம், வரலாறு

06 - O/L, A/L

அதிகமான மாணவர்களின் விருப்பிற்கு ஏற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்பவியிலிருந்து கற்பிக்கப்படும். தனியார் கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம். (8674)

077 482 5438

## IELTS DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General

IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

DIPLOMA IN ENGLISH — புதிய பிரிவு ஆரம்பம் 22/11/2021 Mon 9:30 am

SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-3057)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

021 226 2470 0777577333 | 021 227 0775 0777227074 | 021 224 1970 0776032300 | 021 225 6665 0761354503 | 021 228 5655 0776398096

## வீட்டுப் பணிப்பெண் தேவை

நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு நம்பகரமான குடும்பப் பொறுப்புகளற்ற 40 வயதிற்கு உட்பட்ட வீட்டில் தங்கி இருந்து உணவு சமைக்க, வீட்டைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை. (8632)

WhatsApp 0041 772 304 948

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

மாலி சந்தி, அல்வாய்

O/L துரித மீட்டல் வகுப்புக்கள் 22.11.2021 திங்கள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

புதிய சுகாதார விதிமுறைக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட தொகையினருடன் வகுப்புக்கள் நடத்தப்படும். (C-3061)

அனுமதி இன்று முதல் — தொடர்புகளுக்கு: 077 309 5176, 077 925 0105, 021 226 3206

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக்கட்டுவன் வீதியில் 10 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 ½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500M தூரம்) (8694)

தொடர்பு 077 623 4204 077 288 0152, 076 890 9251

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி, B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 755 8606 077 015 0353 (8695)

## தொழில் வழிகாட்டல் ஆலோசனையும் வேலை வாய்ப்பும்

க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரக் கல்வியினை முடித்த மற்றும் பல்கலைக் கழக பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த மாணவர்கள் அத்துடன் நல்லதொரு வேலை வாய்ப்பினை தேடுபவர்களுக்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனையும் அதன் பின்னர் வழங்கப்படும் பயிற்சியின் மூலம் தகுதி மற்றும் திறமை அடிப்படையில் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பம்.

குறிப்பு: முதல் பதிவு செய்யும் 50 பேருக்கே இவ்வாய்ப்பு வழங்கப்படும்.

திகதி :- 21.11.2021 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- LOLC Life Assurance (1ஆம் மாடி) இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள விரும்பின் கீழ் வரும் தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

S.சுரேஸ்ராஜா - 077 662 2402
S.ரஞ்சித் - 077 112 5888 (8679)



வலம்புரி — விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள் ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-2919)

0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.